செ.வெ.எண்:36 நாள்:22.09.2020

பெரம்பலூர் மாவட்டம்

**வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித்துறை மற்றும் பொதுப்பணித்துறையின் மூலம் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா.இ.ஆ.ப. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

ஊரக வளர்ச்சித்துறை மற்றும் பொப்பணித்துறையின் மூலம் வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா.இ.ஆ.ப. அவர்கள் இன்று 22.09.2020 நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**அதன் விவரம் வருமாறு:**

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வெங்கலம் ஊராட்சியில் ரூ.32.25 இலட்சம் மதிப்பீட்டில் கிருஷ்ணாபுரம் - வெண்பாவூர் முதல் கவுண்டர் காலனி வரை சாலை சீரமைக்கும் பணி, பெரிய வடகரை மற்றும் கைகளத்தூர் ஊராட்சியில் ரூ.1.7 இலட்சம் மதிப்பீட்டில பாரத பிரதமரின் அனைவருக்கும் வீடு கட்டும் பணி, ரூ.4.19 இலட்சம் மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் கழிவறை கட்டும் பணி, ரூ.22.65 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சிமன்ற அலுவலகம் கட்டும் பணி, ரூ.5.26 இலட்சம் மதிப்பீட்டில் கைகளத்தூர் ஊராட்சியில் தடுப்பனை ஓடையின் குறுக்கே தடுப்பனை கட்டும் பணி, ரூ.40.78 இலட்சம் மதிப்பீட்டில் சிறுநிலா முதல் பசும்பலூர் காலனி வரை சாலை அகலபடுத்தும் பணி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ரூ.9.08 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையங்கள் கட்டும் பணிகள் உட்பட பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது.

அதனடிப்படையில் இன்று (22.09.2020) பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்ப்பட்ட வேப்பந்தட்டை ஊராட்சியில் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.1.80 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வீடு கட்டும் பணியும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு நிதி திட்டத்தின் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் வேப்பந்தட்டை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நுழைவாயில் வளைவு கட்டும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இப்பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர துறை அலுவலர்களுக்கு அறிவுரை மற்றும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து தழுதாழை கிராமத்தில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் கீழ் நவீன முறையில் மரம் செதுக்கும் இயந்திரத்தின் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி மகளிர் சுய உதவிக்குழுக்களின் உதவியுடன் உருவாக்கப்படும் மரச்சிற்பங்களின் தரம் குறித்தும், அதன் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி குறித்தும் கேட்டறிந்தார். மேலும் அந்த மரச்சிற்ப தொழிலை எந்தெந்த வகைகளில் முன்னேற்றமடைய செய்யலாம் என்பது குறித்தும் சம்மந்தப்பட்ட அலுவலர்களிடமும், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களிடமும் கலந்து ஆலோசித்தார்.

மேலும் அரும்பாவூரில் முதலமைச்சரின் குடிமராமத்து திட்டத்தின் கீழ் சீரமைக்கப்பட்ட ஏரியில் தற்போதைய நீர்வரத்து நிலையை அறிந்து கொள்வதற்காக மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் ஏரிக்கு நீரை கொண்டு வந்து சேர்க்கும் நீர்வரத்துக் கால்வாய்களை ஆய்வு செய்து தொடர்ந்து பராமரித்திட பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது செயற்பொறியாளர்(ஊ.வ.து) செந்தில்குமார், இளநிலை பொறியாளர்(ஊ.வ.து) செல்வராஜ், வேப்பந்தட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் இமயவர்மன், உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**